அண்ணா, சிறைத் தண்டனை ஏற்றார்!

திராவிடநாடு

மலர் 9 | 24 9–50 | இதழ் 13

இலங்கை 8 சதம்] விலை அணா ஒன்று [மலாய் நாடு 6 காசு

ஆரியமாயை வழங்கிய பரிசு

ரூ. 700 அபராதம் தவறினால் ஆறு மாதம்

புன்சிரிப்போடு சிறை புகுந்த காட்சி!

"அடக்கு முறை ஆட்சி ஒழிக"

பொதுமக்களின் கொந்தளிப்பு

மண்டபத்தின் உள்ளேயும், வெளியேயும். தாழ்வாரத்திலும் தருக்களின் நிழலிலேயும், பரந்த மைதானத்திலும் பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்து நின்ற மக்கள் கூட்டம் ஆத்திரத்தையும், ஆவேசத்தையும் வாட்டத்தையும், வருத்தத்தையும், திகைப்பையும், திகிலையும், கண்ணீர்த் துளியையும், கனல் பொறியையும் சிந்திக்கொண்டிருக்க, ஒரே ஒரு முகம் மலர்ந்த தோற்றத்தோடு மகிழ்ச்சியைத் தழுவிக்கொண்டிருக்கும் அரியதொரு காட்சி, இன்று திருச்சியிலே காணப்பட்டது!

இன்றைய ஆணவ அடக்கு முறை அரசாங்கம் நடத்திக் காட்டிய தர்பார் 'காட்சிகளிலே' ஒன்றுதான், மேலே தீட்டிக் காட்டப்பட்டிருப்பது.

"'ஆரியமாயை'யின் நூலாசிரியரான சி. என். அண்ணாதுரை இ. பி. கோ. 153 ஏ. பிரிவுப்படி குற்றவாளி என்று கருதப்படுவதால், அவர் ரூ. 700 அபராதம் செலுத்தவேண்டும் அப்படிச் செலுத்தத் தவறினால் ஆறு மாதம் வெறுங்காவல் சிறை தண்டனை ஏற்கவேண்டும்" என்ற சொற்கள், இன்று மாலை 3-15 மணிக்கு, திருச்சி சப்டிவிஷனல் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில், மாஜிஸ்டிரேட்டால் உச்சரிக்கப்பட்டபோதுதான், அந்த அரிய காட்சி தோற்றமளித்தது.

மக்கள் வேதனைப் புயலிலே சிக்கிக் கிடந்த அந்த நேரத்தில்தான், திராவிடம் ஆவலோடு கூவி அழைக்கும் 'அண்ணா', மலர்ந்த முகத்தோடு, புன்முறுவலைத் தூதனுப்பி, தண்டனையை ஏற்கத் தயாராக இருக்கிறேன் என்று கூறினார்கள்.

தோழர் சி. என். ஏ. அவர்கள்மீது தொடுக்கப்பட்டிருந்த "ஆரிய மாயை வழக்"கில் இன்று தீர்ப்பளிக்கப்படுகிறது என்ற செய்தியை அறிந்த திருச்சியின் பல பகுதிகளைச் சேர்ந்த மக்களும், திராவிடத்தின் பல பாகங்களைச் சேர்ந்த மக்களும், காலையிலிருந்தே திருச்சி சப்டிவிஷனல் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் வந்து கூட ஆரம்பித்து விட்டார்கள்.

கோர்ட் மைதானத்தில் நிழல் கண்ட இடங்களிலெல்லாம் மக்கள் கூட்டங் கூட்டமாகக் கூடி நின்று அண்ணாவின் வரவைக் காலை 11 மணியிலிருந்தே எதிர்பார்த்து நின்றனர்.

அண்ணா அவர்கள் 'ஆரிய மாயை' வெளியிட்ட தோழர் கண்ணப்பனுடன், காலை 11-30 மணிக்குத் தோழர்கள் நெடுஞ்செழியன், பராங்குசம், தர்மலிங்கம், புட்டாசாமி, சாம்பு, கே. கோவிந்தசாமி ஆகியவர்களோடு கோர்ட்டுக்கு வந்து சேர்ந்தார்கள்.

தீர்ப்பின் விளைவை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்த மக்கள், புடை சூழ்ந்து நின்று ஆரவாரித்தார்கள். தீர்ப்பு மாலை 3 மணி அளவிற்குத்தான் வழங்கப்படப் போகிறது என்ற செய்தியைத் தெரிந்துகொண்டவுடன் அண்ணா அவர்கள் தம்மிடத்திற்குத் திரும்பிவிட்டார்கள்.

சோழவந்தானில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழக மத்திய செயற் குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டபடி, அபராதம் போட்டால் செலுத்துவதில்லை, சிறை தண்டனை விதித்தால் ஏற்றுக்கொள்வது என்ற திடமான முடிவுடன், அண்ணா அவர்களும் மற்றைய தோழர்களும் சரியாக மாலை 3 மணி அளவிற்கு நீதி மன்றத்திற்கு வந்து சேர்ந்தார்கள்.

அண்ணா அவர்கள் வந்து சேரும்போது, நீதிபதி சப் டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் வீற்றிருக்க, வழக்கறிஞர்களும் போலீஸ் அதிகாரிகளும் அமர்ந்திருக்க, போலீஸ் ரிஸர்வ் காவல் பலமாக இருக்க, உள்ளும் புறமும், மைதானத்திலும் ஏராளமான மக்கள் நெருக்கிக்கொண்டு நின்றிருந்தார்கள். (4-ம் பக்கம் பார்க்க)

☆ சென்று வருகிறேன் ★

"சென்று வருகிறேன்—வெளியே வந்ததும் உங்கள் வெற்றிப் பட்டியலைக் காட்டுங்கள்! நம்பிக்கையுடன் செல்கிறேன், நமது நல்லதம்பிகள் நாட்டை மீட்டிடும் நற்பணியினைத் தொடர்ந்து நடத்திவருவார்கள் என்று! —சென்று வருகிறேன். வணக்கம்!"

ஆசைத்தம்பி, வழக்கு அப்பீல்

சென்னை உயர்நீதி மன்றத்தில் தாக்கல்

விரைவில் விசாரணை.

"காந்தியார் சாந்தியடைய" என்ற நூலை எழுதியமைக்காக தண்டனை பெற்ற தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, 11—9—50 அன்று ஜாமீனில் திருச்சி மத்திய சிறையிலிருந்து வெளியானார்.

திருச்சி ஜில்லா கோர்ட்டில் ஆறுமாதக் கடுங்காவல் தண்டனையும் ரூ 500 அபராதமும் விதிக்கப்பட்டதை எதிர்த்து' கழகத்தின் சார்பில் திருச்சி செஷன்ஸ் கோர்ட்டில் அப்பீல் செய்து கொள்ளப்பட்டதும், அங்கு ஆறுமாதச் சிறைவாசம் ஒரு மாதமாகக் குறைப்பட்டதும் தோழர்கள் அறிவார்கள்.

அந்தத் தீர்ப்பையும் எதிர்த்து, சென்னை உயர்நீதி மன்றத்தில் ஆசைத்தம்பி சார்பில் அப்பீல் தாக்கல் செய்யப்பட்டது. அதோடு ஜாமீன் மனுவும் சமர்ப்பிக்கப்பட்டது. மனுக்களை நீதிபதி சோமசுந்தரம் அவர்கள் ஏற்றுக்கொண்டு தோழர் ஆசைத்தம்பியை ஜாமீனில் விடுவிக்க உத்திரவு பிறப்பித்தார்.

ஐகோர்ட்டில் வழக்கு சம்பந்தமான காரியங்களை சென்னைத் தோழர்கள் கே. கோவிந்தசாமி, டாக்டர் கணேசன் ஆகியோர் கவனித்து வருகின்றனர்.

தோழர் ஆசைத்தம்பி சார்பில் பிரபல வழக்கறிஞர் துரைராஜ் அவர்கள் வாதாட இருக்கிறார் 'திராவிட நாடு' ஜாமீன் வழக்கில், வாதாடி வெற்றிபெற்ற வழக்கறிஞர்தான் திரு. துரைராஜ்.

விரைவில், உயர்நீதிமன்றத்தில் ஆசைத்தம்பி வழக்கு விசாரணைக்கு வருமென்று, தெரியவருகிறது.

இதய கீதம்

அரங்கண்ணல்

எழுத்துச் சிற்பிக்குச் சிறைவாசம்! இந்நாட்டைப் பொன்னாடாக்குவேன்' என்று பணிபுரியும், பகுத்தறிவுத் தளபதிக்குத் தண்டனை!!

'தாழ்ந்த தமிழகமே!' என்று, தன் குரல் எழுப்பி, இளைஞர்களின் படைவரிசையை நிர்மாணித்த வீரர், அவர். அறிவொளி எழுப்ப, எழுச்சி முரசு கொட்டி, விடுதலைப் போருக்கு வெற்றிச் சங்கு முழக்கும் வீரர்களின் 'அண்ணா' அவர்.

பொதுச் சேவைக்குத் தன்னை அர்ப்பணித்துத் தன்போன்ற பலரைத் தட்டி எழுப்பிப் படை திரட்டிய பாசறைச் சிங்கம் அவர்.

படித்தோரையும் பண்டிதரையும் தமது அறிவு 'வாள்'கொண்டு, வீழ்ச்சியுறச்செய்து வெற்றிக் கொடி நாட்டிய வீரத்தின் தூதுவர் அவர்.

தமிழிலே, புதுநடை கண்ட பொக்கிஷம்—தென்றலையும் புயலையும் தமிழ் மொழியில் காட்டிய புதுமைக் களஞ்சியம்.

அவரது எழுத்துக்கள்—சமுதாயத்தின் புரட்சித் தூதுவர்கள். தமிழகத்தைத் தட்டி எழுப்பிய பெருமை வாய்ந்தவை—தமிழ் நிலைக்கும் வரை, தனித்து மிளிரும் சிறப்பு பெற்றவை.

மாற்றாரும் மயங்கி 'அண்ணா! அண்ணா!!' என்று போற்றும், எழுத்தின் வேந்தர், அவர்.

அவரது கருத்துக்கள், விசையொடிந்த திராவிடத்தை வீறுகொள்ளச் செய்தன. அவரது எழுத்துக்கள், தளர்ந்த நரம்புகளிலும் புதுக் குருதி ஓடச் செய்தன. அவரது பேச்சுக்கள்—அநீதியை அழித்து, பல மறுமலர்ச்சித் தூதுவர்களை நாட்டுக்குத் தந்தன.

அவருக்குச் சிறைத் தண்டனை!

ஐயகோ, அவர் சிறைக்குள்!!

இன்முகச் சொல்லால், புன்னகை வீச்சால், பொதுமேடைப் பேச்சால், திராவிட சமுதாயத்துக்கு உரிமையாகிவிட்ட 'அண்ணா' அவர்.

பொதுச் சேவைக்கு இளமை முதல் தன் வாழ்வை அர்ப்பணித்துவிட்டு, ஏழைகளோடு ஏழையாய், இளைஞர்களோடு இளைஞராய், இந்நாட்டின் உயர்வுக்குப் போராடி வரும் வீரர் அவர்.

தன் கொள்கைகளுக்காகத் தன் குடும்ப நலனைக் கூட கவனிக்காது 'நாட்டை தனது வீடு' என்று, பறந்து திரியும் புரட்சிப் புறா அவர்.

நீதி மக்களுக்குக் கிடைக்கவேண்டும் என்பது அவர் இலட்சியம். உரிமை மலரவேண்டும் நாட்டில் என்பது அவர் இதய கீதம்.

அவரை, நீதி, சிறைக்குள் தள்ளிவிட்டது'
'உரிமை பேசினோர்! சிறைக்குள் தள்ளி விட்டனர்!!

ஜாரின் ஆட்சியல்ல நடப்பது, ஹிட்லரின் தர்பாரல்ல இருப்பது, ஹாமியின் பிம்பங்களல்ல ஆள்பவர்கள், வெள்ளையனின் பிரதிபலிப்புகளல்ல வீற்றிருப்பவர்கள்.

காங்கிரஸ் சர்க்கார்!" பராஜப மந்திரிகள்!! இங்கு, அவருக்குத் தண்டனை — சிறைவாசம— ஆறு மாதம்.

நூல் எழுதியது குற்றமாம் — வழக்குத் தொடர்ந்து திராவிடத்தின் வழி காட்டியைச் சிறைக் கம்பிகளுக்குள்ளே, நிற்கவைத்துவிட்டது.

இலட்சக் கணக்கான மக்களின் எண்ணங்களைத் தன் எழுத்தால் விழிப்புறச் செய்தவர். குரலால், திராவிடத்தைச் சூழ்ந்த கும்மிருட்டைக் கிழித்து, சிறுவர் முதல் பெரியோர்வரை எல்லோரது இதயங்களிலும் கலந்துவிட்டவர். அவரை ஆட்சியாளர், இரும்புக் கதவுகளுக்குள் பூட்டி விட்டனர்.

"சிறைக்க திராவிடமே! உன்னைச் சிங்காரச் சோலையாக்குவேன்" என்று சிங்கக் குரல் ஒலித்து, தினசரி, நாட்டின் மூலை முடுக்குகளிலெல்லாம் வெற்றி முழக்கம் எழுப்பும் அவரைச் சிறைக்குள் தள்ளிவிட்டனர்.

அவரது, தூதுவர்கள் நாம், அகண்ட பூமியில் உலவிக் கொண்டிருக்கிறோம்!

அவர் சுற்றியுலவிய இன்பத் திராவிடம் இதோ பரந்து விரிந்து கிடக்கிறது!

ஆனால், அவர்,
அதோ, சிறு அறைக்குள் உலவுகிறார்!

மூன்று பக்கம்—கற்சுவர், ஒரு பக்கம் கதவோடு கூடிய அறைக்குள்ளே அடைபட்டுக் கிடக்கிறார்!

வெளியே காவலர் நிற்க, கம்பிகளினூடே பார்த்துக்கொண்டு இருக்கிறார்!

வானப் பரப்பைக் கண்டு அதன் அழகைத் தீட்டிக் காட்டியவர் அவர். முழுமதி, குளிர்நிலவு, கோலக் காட்சிகள் யாவையும் அவரது கவிதைச் சொற்களிலே நாம் கண்டதுண்டு—மகிழ்ந்ததுண்டு.

அத்தகைய சிந்தனைச் சிற்பி, சிறைக்கம்பிகளுக்குள்!

எண்ணமுடியவில்லை! இதயம் குமுறுகிறது!!
இந்நாட்டின் 'இதயம்' அவர்!
அவருக்குச் சிறை!!

ஓராண்டல்ல, ஈராண்டல்ல பதினைந்து ஆண்டுகளாக, அவர் எழுதி வருகிறார். பேனாவைப் பிடித்த நாள் முதல், இன்றுவரை, அவரது எழுத்துக்கள் முறிந்து விழுந்ததில்லை!

"வானத்துக்கு ஒரே நிலவு!"
"வார்த்தை வீச்சுக்கு ஒரே அண்ணா"

என்ற புகழ்ச் சுவையை, அவருக்கு, குவித்துக் கொண்டே இருப்பவை அவரது எழுத்துக்கள்.

நீசிக்குப் போரிடும் போது அவை 'போர் வாள்'களாகிவிடும்! அறப்போரில் குதிக்கும்போது 'முரசொலி'களாக முழக்கும்! தீமையை நோக்கிப் பாயும்போது 'தீப்பொறி'களாக மாறும்! எரிமலை சூறாவளி, பெரும்புயல் எல்லாம் கலந்திருக்கும்!

ஆனால்,

அதே நேரத்தில், அந்த எழுத்துக்களில், தேன் தமிழின் சுவை ஓடும், அருவியின் சலசல வென்றசப்தம் ஒலிக்கும், இன்பம் சுரக்கும், வீணையின் நாதம் கேட்கும்! விளையாடுமாதரின் கேலி, ஒலிக்கும்! தென்றல் வீசும்!

அந்த எழுத்துக்கள்தான்,

இன்று அவரை, நம்மிடமிருந்து பிரித்துப் போய்ச் சிறைக்குள்ளே அடைத்து வைத்திருக்கின்றன.

அந்த எழுத்துக்களில்தான்—வகுப்புத் துவேஷம் இருக்கிறதாம். வழக்குப்போட்டு 'வம்பு' செய்து, அவரைப்பூட்டிவிட்டிருக்கிறது சர்க்கார்.

பதினைந்து ஆண்டுகளாக, நாட்டவர் இதயத்தை மலர்வித்த, எழுத்தாளர் அவர். ஒன்பது ஆண்டுகளாக திராவிடநாடு'மூலம், திராவிடத் திருநாட்டை, அறிவுக்காடாக, அவர், ஆக்கிவைத்தார்.

அப்போதெல்லாம் 'காணப்படாத' 'வகுப்'புத் துவேஷம், இந்தக் கண்ணியர்கள் ஆட்சியிலே கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது!!!

'கல்கி'—வகுப்புத்துவேஷம் யாரைநோக்கி மூட்டப்படுவதாக ஆளவந்தார் கூறுகின்றனரோ அத்திருக்கூட்டத்தின், பிரதிபிம்பம். அவர், புகழ்ந்தவைதான் 'அண்ணா'வின் செயல்கள். ஆட்சிப்பீடத்திலிருந்த அவினாசி—ஆர்வத்தோடு பாராட்டியவைதான் 'அண்ணா'வின் கருத்துக்கள்.

'வேலைக்காரி' காணாதோர் இல்லை — 'சந்திரமோகன்' மகிழாதார் கிடையாது 'சந்திரோதயத்தால்' குதூகலித்தோர் பலர். 'ஓர் இரவில்' மெய்சிலிர்த்தவர் ஏராளம்.

அந்த எழுத்துக்கள்தான் வகுப்புத்துவேஷம் மூட்டுவனவாம்!

வெள்ளையன் இருந்தபோதும் அவரது எழுத்துக்கள் உலவத்தான் செய்தன. வெள்ளையன் வெளியேறி 'சுதந்திரம்' மலர்ந்தபோதும் அவரது எழுத்துக்கள் உலவிக்கொண்டுதான் உள்ளன.

அவர் எழுத்தால் — சிறுகலாம் விளைந்ததில்லை! சில்லறைப்பூசல்கூட எற்பட்டது கிடையாது – சிரிப்போடு, 'எழுதுவதிலும்நியாயம்இருக்கத்தானே செய்கிறது,' என்றே எதிரிகளும் கூறுவர்! ஒருகலகம்—சிறுசண்டை—சாதாரணப்பூசல் எதையும் காட்டமுடியாது!

இருந்தும் காந்தியார் சீடர்கள்,
சிறைக்குள்ளே தள்ளிவிட்டனர்!

"வானொலி"யிலே, அவர் குரல் ஒலித்ததுண்டு—'கருத்து அருவி'யென அவரைப் பலர் பாராட்டினதுண்டு. அவரது நூல்கள்—இல்லாத வீடில்லை! படிக்காத இளைஞரில்லை!! பரவாத இடமில்லை!!

கடல்கடந்தும், அவர் எழுத்துக்கள், மணக்கின்றன. இலங்கைத்தீவில், மலேயா தீபகற்பத்தில், பர்மியநாட்டில், ஆப்பிரிக்கக்கண்டத்தில், இந்தோசீனாவில் — எங்கெங்கு தமிழர்களுண்டோ அங்கெல்லாம் இருக்கின்றன!

அவர் தமிழ்ச் சோலையின் குயில்!

தீமைக் காட்டின், புயல்!

பல்லாயிரக்கணக்கான பொதுமேடைகளிலே பேசியிருக்கிறார். இலட்சக்கணக்கான மக்கள் மனதை, மாற்றியிருக்கிறார்.

ஆனால், இதுவரை, அவரால் துவேஷம் வளர்ந்தது என்று—யாரும் கூறியதுமில்லை! ஆளவந்தாரும் எடுத்துக்காட்டியதில்லை!!

அப்போது,

இல்லாத — காணப்படாத — வகுப்புத் துவேஷம்,

இப்போது,

கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது! விந்தை! வேடிக்கை!! வேதனை!!!

700 ரூபாய் அபராதம்—தவறினால் ஆறு மாதம் சிறைவாசம். பொதுவாழ்வு அவருக்குப் 'பரிசு' தந்துள்ளது "ஆரியமாயை" மூலம்.

ஆரியமாயை நூலில் அடங்கியுள்ள கட்டுரைகள் இப்போது தீட்டப்பட்டவையல்ல. வெள்ளையன் காலத்திலேயே, திராவிடநாடு, இதழில் வந்த கட்டுரைகளின் தொகுப்பு நூல்தான் அது. பெரும்பாலும் மேனாட்டு அறிஞர்களின் கருத்துக்கள் நிரம்பியது.

அந்த நூலின் கட்டுரைகள் வகுப்புக்கு — வகுப்பு, துவேஷத்தைச் சிருஷ்டிக்குமாம்! இப்போதுதான் 'இவர்கள்' கண்டுபிடித்தனர்!!

அண்ணாவை, நம்மிடமிருந்து பிரித்துவிட்டனர். காராக்கிரகத்துக்கு கொண்டு சென்றுவிட்டனர்.

பிரிவு—பலாத்காரமானது!

அவரும் நாமும் சேர்ந்துலவிய இடம் — வெறிச்சிட்டுக் கிடக்கிறது! அவரது புன்னகைப் பேச்சு நிலவிய இடம், அவர் இல்லாததால், அழகிழந்த வானம் போலாகிவிட்டது!

பிரிவை நினைத்தால்—பெருமூச்சு நம்மை அறியாமலேயே புறப்படுகிறது. அனலும்,புனலும் சேர்ந்து கிளம்புகின்றன கண்களிலிருந்து.

அவர் நம்மிடையிலிருந்து பலாத்காரமாகக் கொண்டுபோய் பூட்டப்பட்டு விட்டார்!

ஆனால், அவர் உருவம் நமது இதயத்திலே ஒளிவிடுகிறது! அவரது கருத்துரைகள் நமது எண்ணங்களிலே, புயலைச் சிருஷ்டிக்கின்றன!

அவரைக்கொண்டுபோய் சிறைக்குள்ளே தள்ளிவிட்டனர். நமது மத்தியிலிருந்து பிரித்துவிட்டனர். இந்த 'காருண்ய' சர்க்கார்!

நம்மோடு கலந்துகிடக்கும் அண்ணாவைப் பிரிக்கமுடியாது. நாட்டோடு ஒன்றிக் கலந்துவிட்ட அவரது எழுத்துக்களை, மறைத்துவிட முடியாது!

அவை, நமது வாழ்வின் விடிவெள்ளிகள். அவைகளை வைத்துக்கொண்டு நடந்துகொண்டே இருப்போம்—அண்ணா வரும்வரை!

*

இராமநாதபுர மாவட்ட

தி. மு. க.

முதல் மாநாடு

31—9—50, 1—10—50

தேதிகளில்

*

சிவகெங்கையில்

நடைபெறும்.

★ நான் சென்று வருகிறேன் ★

எதிர்பார்த்தது நேரிட்டுவிட்டது வகுப்புத்துவேஷம் மூட்டக் கூடிய விதமாக 'ஆரியமாயை' என்ற நூல் எழுதினேன் என்று தொடுக்கப்பட்டு, 153வது செக்ஷன்படி ரூ 700 அபராதம் கட்டத் தவறினால் ஆறுமாதம் சிறைவாசம் என்று தண்டிக்கப்பட்டிருக்கிறேன்.

பொதுநலத் தொண்டர்களுக்குச் சிறைவாசம், எதிர்பாராத சம்பவமல்ல—எந்தச் சமயமும் அதை எதிர்பார்த்துக் கொண்டுதான் இருந்து தீரவேண்டும்.

மேலும் சமுதாயத்திலே புதியதோர் அமைப்பைக் காணவேண்டும் என்ற குறிக்கோளுடன் பணியாற்றும் நமது இயக்கத்துக்கு, தாக்குதல் பல இடங்களிலிருந்து கிளம்பிய வண்ணம் இருந்துதான் தீரும். அதற்குத் தயாராக இல்லாவிடில் கொள்கையை வெற்றி பெறச் செய்ய முடியாது.

"ஆரிய மாயை"—ஒரு தனி நூல் அல்ல. பத்திரிகையிலே பல்வேறு சமயங்களிலே என்னால் தீட்டப்பட்ட பல கட்டுரைகளின் தொகுப்பு. அதிலே வகுப்புத் துவேஷம் இருப்பதாக வழக்கு தொடரப்பட்டது—சட்டம் தன் கடமையைச் செய்திருக்கிறது. நானும், சமுதாயத்துக்கு நான் செய்யவேண்டிய கடமை என்ற பொறுப்புணர்ச்சியுடன் தான் அந்தக் கட்டுரைகளைத் தீட்டினேன்—என் மனச்சாட்சியின்படி தான் நான் நடந்துகொண்டேன் — ஆனால் இன்றைய சூழ்நிலையில், இவ்விதமான பணிபுரிபவர்கள், அடக்குமுறைக்கு ஆளாகுதல் என்ற விலைகொடுக்க வேண்டி இருக்கிறது. உள்ளத்தில் பட்டதை ஊருக்கு உரைத்திட வேண்டுமானால், இந்த 'விலை' கொடுத்தே ஆகவேண்டும். எனவே தான், நான் மகிழ்ச்சியுடன் சிறை செல்கிறேன். கடமையைச் செய்யத் தவறவில்லை, மனச்சாட்சியின்படி நடந்து கொள்ளத் தயங்கவில்லை, கஷ்ட நஷ்டம் ஏற்கவேண்டுமே என்பதை எண்ணிக் கலங்கவில்லை—என்ற எண்ணம் தரும் களிப்பு எனக்கு உறுதுணையாக நிற்கிறது. சிறை இந்த என் உள்ள உரத்தை மேலும் உரமாக்கும் என்றே நம்புகிறேன்.

உங்களைக் காணவும், உங்களுடன் சேர்ந்து பணியாற்றவும் இயலாது—சிறையில் நானும், வெளியில் நீங்களுமாகச் சிலகாலம் இருக்க நேரிடுவதால். இந்த நிலைமை எனக்கோ உங்களுக்கோ மகிழ்ச்சியைத் தராது—எனினும் நாம் இந்தப் பிரிவைச் சகித்துக்கொள்ள வேண்டும்.

மூச்சை அடக்கிக் கடலுக்குள்ளே மூழ்கிச் சென்று, 'முத்து' எடுத்துவந்த பரம்பரையில் பிறந்தோம்! ஆயிரக்கணக்கான அடி ஆழமுள்ள சுரங்கத்துக்குள்ளே சென்று தங்கத்தை வெட்டி எடுத்து வரும் இனத்திலே பிறந்தோம்! சீரிய முறையிலே நமது நாட்டைத் திருத்தி அமைக்கும் பெரும் பணிக்காக நாம், சிறை சென்று சில பல கஷ்டத்துக்கு ஆளாவது, பெரியதோர் காரியமல்ல. இதுகூடச் செய்யாமல் நமது இலட்சியம் வெற்றி பெற்றுவிடும் என்று எதிர்பார்ப்பது ஏமாளித்தனமாகும். எனவே சிறை செல்வது கண்டு, திடுக்கிடத் தேவையில்லை. பிரிவு நமக்குள் உள்ள பாசத்தை மேலும் பலப்படுத்தும்.

நான் சிறையில் இருக்கும்போது, நாம் அனைவரும் ஆற்றவேண்டிய தொண்டிலே எனக்கு உள்ள 'பங்கினை' என்பொருட்டு நீங்கள் தான் செய்யவேண்டும். நான் சிறை சென்றதால், சிலவேலைகள் தடைப்பட்டுவிட்டன, என்ற சொல்லைவிட எனக்கு வேதனை தரக்கூடியது வேறு எதுவுமில்லை. இதை உணர்ந்து இயக்கப்பணியினை, என்றும்போல், அல்ல! அல்ல!—முன்பிருந்ததைவிட அதிக உற்சாகத்தோடு செய்துகொண்டு வரக்கோருகிறேன். சிறையிலே நாம் இருந்தாலும், நமது 'செல்வத் தம்பிமார்கள்', தமது திறத்தாலே இயக்கத்தை எழிலுள்ளதாக்கி வருகிறார்கள் என்ற 'சேதி' எனக்குச் சிறைவாசத்தின்போது கிடைத்தால் போதும் — சிறையிலே தரப்படும் 'சோளக்கஞ்சி'யே, எனக்குப் பஞ்சாமிருதமாக இனித்திடும்.

நமது கழகம், ஓராண்டுப் பருவத்தில் உள்ளது. சுற்றிலும் சூது மதியினரின் சுடுசொற்கள் வீசியவண்ணம் உள்ளன. வசதி இல்லை! பத்திரிகை இல்லை! 'திராவிடநாடு' தினசரியாக வெளியிடும் வேலைகள் நடந்துகொண்டிருக்கும் நேரத்தில் சிறைக்கு அழைத்துச் செல்லப்படுகிறேன்—எனவே, தினசரி வெளிவருவதும் தடைப்பட்டுவிட்டிருக்கிறது! இவ்வளவு இடுக்கண்களையும், உங்கள் ஆர்வமும் அறிவாற்றலும் பொடிப் பொடியாக்கிவிடும் என்ற நம்பிக்கையுடன் சிறை செல்கிறேன், என்நம்பிக்கை வீண்போகாதல்லவா!

கோயில்பட்டித் தீர்மானம், நமக்குப் புதியபொறுப்பான, பணியினைத் தந்திருக்கிறது. தொடக்கம், திவாகர் சென்னை வந்தபோது கண்டோம். தொடர்ந்து பணியாற்றவேண்டும், நான் வெளியே இல்லை' ஆனால் தோழர்களே! பணியை மறந்துவிடுவீர்களா!! நான் வெளியே இருந்தால் நடப்பதைவிடச் செம்மையானமுறையிலே, பணியினைத் தொடர்ந்து நடத்துவீர்கள் என்பது எனக்குத் தெரியும். எனவே தான், என்ன நேரிடுமோ — எதற்குக்குந்தகம் ஏற்பட்டுவிடுமோ — என்ற ஏக்கமின்றிச் சிறை செல்கிறேன்.

நமது, பொறுமையைச் சோதிக்கும் விதமாகச் சிறுசொல் வீசுவோர், பலர் உண்டு—அறிவீர்கள் திராவிடச் சமுதாயத்திலே, ஒற்றுமை கெடவேண்டும், கட்டுப்பாடு தூளாகவேண்டும், கலம்விரயமாக வேண்டும், அதுவே நாம் பிழைக்கும் வழி என்று எண்ணிடும் 'பெருந்தகையாளர்கள்' உண்டு—அறிவீர்கள் நமது நோக்கத்துக்கு மாசு கற்பித்து, நமது நடவடிக்கைகளைத் திரித்துக்கூறி, நமது முயற்சிகளை கையாண்டி செய்து, நமது உள்ளத்துக்கு எரிச்சலை மூட்டி, வம்புக்கு இழுப்போர் உண்டு—அறிவீர்கள்! அவர்களல்ல — நமது கவனத்துக்கு உரியவர்கள்! அவர்கள் தூற்றலை முறியடிப்பது அல்ல, நம்முன் உள்ளவேலை! நாம், மகத்தான பணியினை மேற்கொண்டுவிட்டோம்! நமது மாற்றார்கள், மதவெறி, சாதிவெறி, மூடப்பழக்க வழக்கம், சுரண்டல்முறை, எதேச்சாதிகாரம், என்று பலப்பல! பொறுமை கொண்டோர், பொச்சரிப்புக்காரர்கள், அரசியல் உடலிலே தோன்றும் அரிப்புக்கள்! நமதுவேலை அவர்களிடம் மல்லுக்கு நிற்பது அல்ல. அறிவுப்பணி புரியும் ஆற்றல் நமக்கு இருப்பது உண்மையானால், நாட்டு விடுதலையில் நாக்கு நாட்டம் இருப்பது மெய்யானால், நாம் இந்தச் சில்லறைக்குச் சிந்தனையைச் செலவிடலாகாது. இதைத்தயவு செய்து மனதிலே பதியவைத்துக்கொள்ளுங்கள். கண்ணியம் தோற்காது — உறுதியாக இதைச் சொல்லுங்கள். தொடர்ந்து பணியாற்றுங்கள் — திராவிடச் சமுதாயத்திலே, மோதலும் பேதமும் ஏற்படாத வகையில்! யானை பிடிக்கச் செல்பவன், பூனைக்குட்டியைத் தூக்கிக் கொண்டு போவது—நேரக்கேடு அல்லவா! சந்தனக்காட்டுக்குச் செல்பவன், சருகுகளைக்கண்டு, இவைபோதும் என்று இருந்துவிடலாமா? திராவிடநாடு திராவிடருக்கே, என்ற இலட்சியத்துக்காகப் பாடுபடுவது என்று துணிந்து இறங்கியபிறகு, உன்னால் என்ன ஆகிறது, என்ற உருப்படாத வேலையிலா நாட்டம் செல்வது! ஆகாது, தோழர்களே! துளியும் ஆகாது! அந்தப்பாதையைக் கண்ணெடுத்தும் பார்க்காதீர்கள். எழில்மிக்க திராவிடம் உங்கள் உழைப்பைக் கேட்கிறது — உங்கள் ஆற்றலை விரும்புகிறது—உங்களுடைய வீரத்தால்தான் தன் தளைகள் ஒடிந்துபடும் என்று நம்புகிறது. அந்தத் திருப்பணிக்கே, உங்கள் ஆற்றல் பயன்படட்டும்—வேறு திக்கு நோக்கவேண்டாம்.

ஓராண்டு நாம் செய்துள்ள பணியினைக் கணக்கெடுங்கள்—களிப்பூட்டும்—இந்தக் களிப்பு பல மடங்கு வளரும் விதமாக இவ்வாண்டு பணிபுரிவோம் என்று சூள் உரைத்துக்கொள்ளுங்கள். வெற்றி நிச்சயம் வந்து சேரும்.

சிறைவாசம் என் பொதுவாழ்க்கையிலே இது முதல்முறையல்ல

ஆச்சாரியார் ஆட்சிக் காலத்திலே, இந்தி எதிர்ப்பு நடைபெற்றபோது, சென்னைச் சிறையிலே இருந்திருக்கிறேன்—நாலு மாதங்கள். சைதாப்பேட்டை சப்ஜெயிலிலே இருந்திருக்கிறேன்—ஒரு வாரம். இப்போது, கவர்னர்-ஜெனரலாக ஆச்சாரியார் வந்தபோதும் சில நாட்கள் இருந்திருக்கிறேன். பலமுறை சிறை சென்று மன மெருகேறிய பெரியாருடன் பழகி இருக்கிறேன். எனவே, சிறை என்னைச் சிதைத்துவிடாது. நான் உள்ளே இருக்கும்போது, வெளியே நீங்கள், ஆத்திரப்படாமல், ஆர்வத்தோடு, இயக்கத்தை நடத்திச் செல்கிறீர்கள் என்ற 'சொல்' போதும், எனக்குச் சிறையே சிங்கார மாளிகையாகக் காட்சி தரும்.

ஆயிரமாயிரம் மேடைகளிலே பாடி இருக்கிறோம்,

"மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை
நம்மை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை"

என்று. அங்குதான் செல்கிறேன். அருமைத்தோழர்களே! அண்ணாதுரை சிறை சென்றான், ஆனால், திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளம் குன்றவில்லை என்று, எவரும் வியந்து கூறும்வண்ணம் பணியாற்றி வாருங்கள். ஆரிய மாயையில் சிக்கித் தவிப்போருக்கு அறிவு ஒளி தாருங்கள்! திராவிடத்தைத் திருஇடமாக்குங்கள்! சென்று வருகிறேன்—வெளியே வந்ததும், உங்கள் வெற்றிப் பட்டியலைக் காட்டுங்கள்! நம்பிக்கையுடன் செல்கிறேன், நமது நல்லதம்பிகள், நாட்டை மீட்டிடும் நற்பணியினைத் தொடர்ந்து நடத்தி வருவார்கள் என்று!—சென்று வருகிறேன், வணக்கம்.

—அண்ணாதுரை.

1-ம் பக்கத் தொடர்ச்சி

அண்ணா அவர்கள் வந்தவுடன், நேரே மண்டபத்தின் உள்ளே சென்று, அவருக்கென்று போடப்பட்டிருந்த இருக்கையில் அமர்ந்தார்கள். அவரைத் தொடர்ந்து தோழர்கள் நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி, ஈ. வெ. கி. சம்பத், இரா. நெடுஞ்செழியன், கே.கே. நீலமேகம், கே. கோவிந்தசாமி, எம். எஸ். சிவசாமி, பராங்குசம், வானமாமலை, அமிர்தலிங்கம், புட்டாசாமி, சி. வி. இராசகோபால், முத்துக்கிருஷ்ணன், கண்ணப்பன் ஆகியோர் சென்று உடன் அமர்ந்தார்கள். வழக்கைக் காணுவதற்காக தோழர்கள் எஸ். வி. லிங்கம், என். சங்கரன், என். சாம்பு மற்றும் பல கழக முக்கியஸ்தர்களும் வந்திருந்தனர்.

"பெரியாரின் பொன் மொழிகள்" வழக்கில் ஈடுபடுத்தப்பட்டிருந்தவர்கள் முன்னரே வந்து வீற்றிருந்தார்கள். முதலில் அவ்வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டது. அதனை அடுத்து "ஆரியமாயை" வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டது.

நூலை எழுதிய அண்ணாவுக்கு ரூ. 700 அபராதம் என்றும் அதனைக் கட்டத் தவறினால் ஆறு மாதம் வெறுங்காவல் தண்டனை என்றும், நூலை வெளியிட்ட தோழர் கண்ணப்பருக்கு ரூ. 500 அபராதம் என்றும், கட்டத் தவறினால் நான்கு மாதம் வெறுங்காவல் தண்டனை என்றும், சப்டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டால் தீர்ப்பளிக்கப்பட்டது.

அண்ணா அவர்கள் முதலில் தான் அபராதம் கட்டப் போவதில்லை என்றும், சிறை தண்டனை ஏற்கத் தயாரென்றும் கூறினார்கள். நூலை வெளியிட்ட தோழர் கண்ணப்பர் அபராதம் செலுத்திவிட இசைந்தார்.

பெரியார் அவர்களுக்காக வழக்காடிய தோழர் தி. பொ. வேதாசலம் அவர்கள் பெரியாரிடம் சிறிது நேரம் கலந்து பேசியதற்குப் பின்பு. பெரியாரும் அபராதம் கட்டப் போவதில்லை என்றும், சிறை தண்டனை ஏற்கத் தயாராக இருக்கிறார் என்றும் கூறினார்.

பிறகு அண்ணா, பெரியார் இருவருக்கும் வாரண்ட்கள் 'சர்வ்' செய்யப்பட்டன.

போலீஸ் இன்ஸ்பெக்டர் முதலில் அண்ணா அவர்களை அழைத்துச் சென்று போலீஸ் லாரியில் ஏற்றினார். அப்பொழுது கூடியிருந்த மக்கள் "அண்ணா வாழ்க", "அடக்குமுறை ஆட்சி ஒழிக" என்ற ஒலி முழக்கங்களை எழுப்பியவண்ணம் இருந்தார்கள்.

பெரியார் அவர்கள் பிறகு லாரியில் ஏற்றப்பட்டவுடன் லாரி மத்திய சிறைச்சாலை நோக்கி புறப்பட்டது.

அண்ணாவோடு வந்திருந்த முக்கிய தோழர்கள் தனிக் காரில் ஏறிக்கொண்டு லாரியைத் தொடர்ந்தார்கள். சிறைச்சாலையின் அருகில் லாரி சென்று சேருவதற்கு முன்பே இவர்கள் சென்று காத்துக்கொண்டு நின்றார்கள்.

அண்ணா, பெரியார் ஆகிய இருவரும் சிறைக் கதவினருகில், லாரியை விட்டு இறங்கி உள்ளே நுழையும்போது, தோழர்களான கே. கே. நீலமேகம், கே. ஆர். ராமசாமி, இரா. நெடுஞ்செழியன், ஈ. வெ. கி. சம்பத், கே. கோவிந்தசாமி, புட்டாசாமி, சி. வி. இராசகோபால ஆகியவர்கள் எதிர்நின்று கைகூப்பி வணக்கஞ் செலுத்தி வழியனுப்பி வைத்தனர்.

அண்ணா அவர்கள் கடைசிவரையில் யாதொரு கலக்கமுமின்றி, "மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை எம்மை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை" என்ற எண்ணத்தை உள்ளத்தில் ஏந்தியவரைப்போல், மலர்ந்தமுகத்தோடு, மகிழ்ச்சி கொப்பளிக்க சிறைக் கோட்டத்தினுள் புகுந்தார்கள்.

அண்ணா அவர்கள் சிறைக்கோட்டம் புகுவதற்குமுன்பு, முக்கியத் தோழர்களிடம் அமைதி, கட்டுப்பாடு, ஒழுங்கு ஆகிய கடமையுணர்ச்சிகளினின்றும் கழகத்தோழர்கள் தவறிப்போகாமல் பார்த்துக்கொள்ளும்படியும், சிவகங்கை மாநாட்டைச் சிறப்பான முறையில் நடத்தும்படியும், மத்திய சர்க்கார் மந்திரிகளுக்குக் கறுப்புக்கொடி பிடிக்கும் திட்டத்தை அமைதியான முறையிலே வெற்றிபயக்கும் விதத்தில் அவர்கள் வரும் ஊர்தோறும் நடத்தும்படியும் சொல்லிச் சென்றார்கள்.

மாலை 4-20 மணி அளவிற்கு, அரசாங்கத்தின் அடக்குமுறை அம்புக்கு ஆளான, திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளரான 'நம் அண்ணா'வை சிறைகோட்டத்தின் கதவுகள் திறந்து வரவேற்றன—புன் சிரிப்போடு அண்ணா புகுந்தார்! கூடியிருந்தோர் இதயங்களெல்லாம் குலுங்கியது!! சிறைக் கதவும் மூடிக்கொண்டது!!! (ந. நி.)

பெரியாருக்கு சிறைத் தண்டனை

'பொன் மொழிகள்' வழக்கில் தீர்ப்பு!

திருச்சி, செப். 18.

வகுப்புத் துவேஷம் ஊட்டும் வகையில் இருப்பதாகப் "பொன் மொழிகள்" என்ற நூலின்மீது தொடரப்பட்டிருந்த வழக்கில், இன்று மாலை 3-மணிக்கு திருச்சி சப்டிவிஷனல் மாஜிஸ்டிரேட் தீர்ப்பு வழங்கினர்.

நூலின் ஆசிரியர் பெரியார். ஈ. வே. இராமசாமி அவர்கள் மீதும், நூலை வெளியிட்ட 'திராவிட மணி' ஆசிரியர் தோழர் டி. எம். முத்து அவர்கள் மீதும், நூலை அச்சியற்றிய தோழர் குமரப்பர் மீதும் வழக்கு தொடரப்பட்டிருந்தது.

இ. பி. கோ. 153எ பிரிவுப்படி (வகுப்புத் துவேஷம் ஊட்டும் வகையில் நூல் எழுதியது) குற்றவாளிகளாகக் கருதுவதாகக் கூறி, சப்டிவிஷனல் மாஜிஸ்டிரேட் மூவருக்கும் தண்டனை விதித்தார்.

நூலாசிரியர் பெரியார் ஈ. வே. ரா. அவர்களுக்கு ரூ 700 அபராதத் தண்டனையும், கட்டத் தவறினால் 6 மாதம் வெறுங்காவல் சிறை தண்டனையும் என்று தண்டனை விதிக்கப்பட்டது. அபராதம் கட்ட மறுத்து பெரியார் அவர்கள் சிறைதண்டனை ஏற்றார்.

அச்சிட்டத் தோழருக்கும், வெளியிட்டத் தோழருக்கும் ரூ 500 அபராதமும் கட்டத் தவறினால் 4 மாதம் வெறுங்காவல் தண்டனையும் என்று தனித் தனியே விதிக்கப்பட்டது. இருவரும் அபராதத் தொகையைக் கட்டிவிடச் சம்மதித்தனர்.

பிறகு பெரியார் போலீஸ் லாரியில் திருச்சி மத்திய சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

(டிராங்போன் செய்தி)

சிவகெங்கை மாநாட்டுச் செய்தி

—*—

இராமநாதபுரம் மாவட்ட தி. மு. கழக முதல் மாநாட்டு அலுவல்கள் யாவும் மிகத்துரிதமாக நடைபெற்று வருகிறது. வரவேற்புக் குழு உறுப்பினர் யாவரும் ஆக்க வேலைகளில் அக்கறை காட்டி மிகவும் உழைத்து வருகின்றனர்.

சிவகெங்கை முத்துசாமி நகரில் பந்தல் போடும் வேலை ஆரம்பித்துவிட்டது. ஏனைய பந்தல்கள்போல் இல்லாது, இதனை எழில்மிக்கதாய் அமைக்க ஓவியர் இருவரும் உடன் உழைக்கின்றனர். பந்தலை, பலலாயிரக்கணக்கான மின்சார விளக்குள்மூலம் அதிக அழகுள்ளதாய் ஆக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மாநாட்டுத் தொண்டர்கள் பலர் சேர்க்கப்பட்டு நல்லமுறையில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறார்கள்.

பிற மாநாடுகளில் சேர்ந்த அனுபவங்களைக் கொண்டு மாநாட்டிற்கு வருவோருக்குப் போதிய வசதிகள் செய்துதர ஏற்பாடாயுள்ளது.

இயக்கத் தோழர்களின் பேச்சு — இசைப்புலவர்களின் இன்னிசை — நடிப்புப் புலவர்களின் கருத்துப் பொதிந்த நாடகம் — இவையெல்லாம் இருக்கும்போது மாநாடுபற்றிக் கூறவாவேண்டும்!

மாநாட்டு டிக்கெட்டுகள் இயக்க முகியஸ்தர்களிடமும், மாவட்ட தி. மு. கழக கிளைக் கழகங்களிலும் கிடைக்கும்.

மாநாட்டின் வெற்றி — நாட்டு மக்களின் வெற்றி.

தண்டபாணி,
விளம்பர உறுப்பினர்.

குறிப்பு:— மாநாட்டில் "சந்திரமோகன்" நாடகத்துக்குப் பதில் "வேலைக்காரி" நாடகம் நடைபெறும். நடிப்புப்புலவர் கே. ஆர். ராமசாமியும், இரா. நெடுஞ்செழியன், ஈ. வி. கே. சம்பத், முதலானோரும் பங்கு கொள்வர்.

"திராவிட நாடு" மலர்

—❀—

முன்பு அறிவித்தபடி, தி. மு. க. ஓராண்டு நிறைவை யொட்டி, விசேஷ அம்சங்களுடன் மேற்படி மலர் 25—9—50 அன்று வெளிவருகிறது.

விலை எட்டணா

மானேஜர்

கண்டனக் குமுறல்கள்

*

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் அண்ணாதுரைக்கு, ஆளவந்தார் தந்த தண்டனை குறித்துத் தகவல் கிடைத்ததும், நாட்டின் நானாவிடங்களில், பொதுமக்களின் ஆத்திரம் கொந்தளித்திருக்கிறது!

திருச்சி: தீர்ப்பு பற்றிய செய்தி கிடைத்ததும், நகர் முழுதும் தீபோல் பரவி பரபரப்பேற்பட்டுவிட்டது. இதன் விளைவாகப் பல்லாயிரக் கணக்கான மக்கள் டவுன் ஹால் முன் கூடினர். அங்கு ஒரு மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. குமுறும் எரிமலைகள் கூடிக் கிடந்தது போலிருந்தது. தோழர் என். சாம்பு தலைமையில் தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி, டி. கே. சீனிவாசன், ஈ. வே. கி. சம்பத், எம். எஸ். சிவசாமி ஆகியோர் வீரமுழக்கம் செய்தனர். ஆத்திரமும், 'அண்ணாவுக்கா இத்தண்டனை' என்ற ஆவேசமும், அவர்கள் பேச்சுக்களில் பொங்கி வழிந்தது.

காஞ்சியில்:- செய்தி, அன்றுமாலை 'டிராங்போன்'மூலம் கிடைத்தது. 'பெரியார் தண்டனையேற்றார்' என்பதும், "அண்ணா சிறைக்குள் தள்ளப்பட்டார், என்ற செய்தியும் காற்றுத்தீப்போல் பரவியதும், திராவிட முன்னேற்றக்கழகத்தோழர்களும், திராவிட கழக நண்பர்களும் ஒன்றுசேர்ந்தனர். ஏராளமான வீரர்கள் அடங்கிய ஊர்வலம் வீதிவழியாகச் சென்றது — தலைவர்களுக்குக்கிடைத்த தண்டனை விபரம் 'மெகபோன்' மூலம் எங்கும் பரப்பப்பட்டது.

பெரிய சுவரொட்டிகள், துண்டுப்பிரசுரங்கள்மூலம், செய்தி பரப்பப்பட்டது.

19-9-50 காலை, ஆயிரக்கணக்கான மக்கள், திராவிட மறுமலர்ச்சிக் கழகத்திலிருந்து புறப்பட்டு பெரிய காஞ்சீபுரம் முதலாய இடங்களிலெல்லாம் சுற்றி வந்தனர். 'அடக்குமுறைஆட்சி ஒழிக' என்ற முழக்கத்தோடு சுற்றி வந்தனர். ஊர்வலத்துக்குப் பின்னால், பலத்த ரிசர்வ் லாரி வந்தவண்ணமே இருந்தது.

காஞ்சியிலுள்ள கடைகள், இன்று சர்க்காரின் போக்கைக் கண்டிக்கு முகத்தான் மூடப்பட்டன.

அன்று மாலைஆடிசன்பேட்டையில்நடைபெற்ற மாபெருங் கண்டனக் கூட்டத்தில் தோழர் சி. வி. எம். அண்ணாமலை தலைமையில், தோழர் இரா, நெடுஞ்செழியனும், நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமியும், மற்றும் பலரும் முழக்கமிட்டனர்.

(விவரம் பிறகு)

Edited Printed & Published by C. N. Annadurai M A at Dravida Nadu" Press 95, Tirukkachinambi Street Kancheepuram